## யூலை – 28 –சனி

### புனித அல்போன்சா

**“என் பெயர் விளங்கும் இந்தக் கோவில் உங்கள் பார்வையில் கள்வரின் குகையாகிவிட்டதோ?”**
**(எரே 7:11)**

### முதல் வாசகம் : ஏரேமியா 7: 1 – 11

ஆண்டவர் எரேமியாவுக்கு அருளியவாக்கு. ஆண்டவரின் இல்ல வாயிலில் நின்று நீ அறிவிக்க வேண்டிய வாக்கு இதுவே. ஆண்டவரை வழிபட இவ்வாயில்கள் வழியாகச்செல்லும் யூதாவின் மக்களே! நீங்கள் அனைவரும் கேளுங்கள்.இஸ்ரயேலின் கடவுளாகிய படைகளின் ஆண்டவர் கூறுவது. ”உங்கள் வழிகளையும் செயல்களையும் சீர்ப்படுத்துங்கள். நான் இந்த இடத்தில் உங்களைக் குடியிருக்கச்செய்வேன்.”இது ஆண்டவரின் கோவில்! ஆண்டவரின் கோவில்! ஆண்டவரின் கோவில்!” என்னும் ஏமாற்றுச் சொற்களை நம்பவேண்டாம்.நீங்கள் உங்கள் வழிகளையும் செயல்களையும் முற்றிலும் சீர்ப்படுத்திக் கொண்டால், ஒருவர் ஒருவரோடு முற்றிலும் நேர்மையுடன் நடந்துகொண்டால், அன்னியரையும் அனாதைகளையும் கைம்பெண்களையும் ஒடுக்காதிருந்தால், மாசற்றோரின் இரத்தத்தை இவ்விடத்தில் சிந்தாதிருந்தால், உங்களுக்கே தீங்கு விளைவிக்கும் வேற்றுத் தெய்வவழிபாட்டை நிறுத்திவிட்டால்,இந்த இடத்தில், முன்பே நான் உங்கள் மூதாதையர்க்கு எக்காலத்திற்குமென்று கொடுத்துள்ள இந்த நாட்டில் உங்களைக் குடியிருக்கச் செய்வேன்.நீங்களோ, பயனற்ற ஏமாற்றுச்சொற்களை நம்புகிறீர்கள். களவு, கொலை, விபச்சாரம் செய்கிறீர்கள் பொய்யாணை இடுகிறீர்கள் பாகாலுக்குத் தூபம் காட்டுகிறீர்கள். நீங்கள் அறியாத வேற்றுத்தெய்வங்களை வழிபடுகிறீர்கள். ஆயினும், என்பெயர்விளங்கும் இந்தக் கோவிலுள் வந்து, என்முன் நின்றுகொண்டு, ”நாங்கள் பாதுகாப்பாய் உள்ளோம்” என்கிறீர்கள். அருவருப்பான இவற்றைச் செய்யவா இந்தப் பாதுகாப்பு? என்பெயர் விளங்கும் இந்தக் கோவில் உங்கள் பார்வையில் கள்வரின் குகையாகிவிட்டதோ? நானும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன், ”என்கிறார் ஆண்டவர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அழகானது.

### நற்செய்தி : மத்தேயு 13 : 24 – 30

அக்காலத்தில் இயேசு எடுத்துரைத்த வேறு ஓர் உவமை. ”விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம். ஒருவர் தம் வயலில் நல்ல விதைகளை விதைத்தார்.அவருடைய ஆள்கள் தூங்கும்போது அவருடைய பகைவன் வந்து கோதுமைகளுக்கிடையே களைகளை விதைத்துவிட்டுப் போய்விட்டான். பயிர் வளர்ந்து கதிர்விட்டபோது களைகளும் காணப்பட்டன.நிலக்கிழாருடைய பணியாளர்கள் அவரிடம் வந்து, ”ஐயா, நீர் உமது வயலில் நல்ல விதைகளை அல்லவா விதைத்தீர்? அதில் களைகள் காணப்படுவது எப்படி? என்றுகேட்டார்கள். அதற்கு அவர், ”இது பகைவனுடையவேலை” என்றார். உடனே பணியாளர்கள் அவரிடம், ”நாங்கள் போய் அவற்றைப் பறித்துக் கொண்டு வரலாமா? உம் விருப்பம் என்ன?” என்றுகேட்டார்கள். அவர், ”வேண்டாம், களைகளைப் பறிக்கும்போது அவற்றோடு சேர்த்துக் கோதுமையையும் நீங்கள் பிடுங்கிவிடக்கூடும். அறுவடைவரை இரண்டையும் வளரவிடுங்கள். அறுவடை நேரத்தில் அறுவடை செய்வோரிடம், ”முதலில் களைகளைப் பறித்துக் கொண்டுவந்து எரிப்பதற்கெனக் கட்டுகளாகக்கட்டுங்கள். கோதுமையையோ என்களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள்” என்று கூறுவேன்” என்றார்.

**தியானம்:** ஆலயங்கள் தேவை இல்லை என்று நினைப்பவர்களும், திருப்பலிக்கு போக விரும்பாதவர்களும் இன்று அதிகம். இந்த நேரத்தை வேறு காரணங்களுக்காக செலவிட நினைக்கின்றார்கள். பணம் சம்பாதிக்க, களியாட்டங்களுக்கு, சுற்றுலாவிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். ஒரு காலத்தில் ஞாயிறு திருப்பலிக்கு செல்லும் மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் இருந்தது. அதனால் பல ஆலயங்கள் அமைக்கப் பட்டன. இன்று அதே ஆலயங்கள் பராமரிக்க முடியாமல் விற்கப் படுகின்றன. ஆலயங்கள், வீடுகளாக, பலமாடிக் கட்டடங்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. அனேகமான ஆலயங்கள் வயோதிபர்களால்தான் நிரம்புகின்றது. சில ஆலயங்கள் எம்மைப்போல ஆசிய நாட்டு மக்களால் நிரம்புகின்றது. இந்த வெற்றிடம் எதனால் ஏற்பட்டது. சமுதாயத்தில் ஏற்பட்ட பலவகையான மாற்றங்களும், தொழில் நுட்ப வளர்ச்சிகளும், பொழுது போக்கு சாதனங்களும் இன்று மக்களை அடிமைகள் ஆக்கி விட்டன. அவற்றில் இருந்து விடுபட முடியாமல் தவிக்கின்றார்கள். இது எங்கே போய் முடியும் என்று ஏக்கப் பெருமூச்சு விடுகின்றோம். இதற்கு முக்கிய பொறுப்பை குடும்பங்களும், பெற்றோரும் ஏற்றே ஆக வேண்டும். பெற்றோரின் தவறான வழிகாட்டலும், வாழ்க்கை முறையும் பிள்ளைகளை தவறாக வழிநடத்தியுள்ளது. பிள்ளைகளை விட செல்லப் பிராணிகளிடம் அதிகம் அன்பு செலுத்துகின்றார்கள். வாயில்லாத ஜீவன்களுக்கு அன்பை மட்டும்தான் காட்ட முடியும். ஆனால் மனிதருக்கு எல்லாம் காட்ட முடியும். அதனால் உறவுகள் இடையே பிரிவுகள், பகைமை உணர்வுகள், எரிச்சல், போட்டி மனப்பான்மை எல்லாம் ஏற்படுகின்றன. இதனை தவிர்க்க பலர் ஒதுங்கியே போகின்றார்கள். சிலர் எதிர்த்து நின்று போராடுகின்றார்கள். கடவுளின் பெயர் விளங்கும் ஆலயங்களை, அவர் வாழும் ஆலயமான எமது உள்ளங்களை நாம் எவ்வாறு பாதுகாக்கப் போகின்றோம்? கோதுமையுடன் களைகளும் வளர்வதுபோல் எம் மத்தியில் வளரும் களைகளை இனம் கண்டு அவற்றை பிடுங்கி ஒழிப்போம்.